**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**ஆத்தூர்**

**------**

**அசல் வழக்கு எண். 76/2021**

**2024ம்** வருடம் **பிப்ரவரி** மாதம் **13ம்** நாள் வாதி தரப்பு சாட்சியான வா**.சா.1** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயக்குமார் | ஜாதி | : |
| த/பெ. | : ராமையா | தொழில் | : டிரைவர் |
| கிராமம் | :அய்யம்பாளையம் | மதம் | : |
| தாலுகா | : ஆத்தூர் | வயது | : 42/2024 |
| தேதி | : 13.02.2024 | | |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் இரண்டாவது வாதியாவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். மேலும் 07.12.2004 தேதியில் நிலக்கோட்டை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.5/2004ல் இடைக்கால மனு எண்.393/2004ன்படி வழங்கப்பட்ட சமரச தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 23.09.2019 அன்று ஆத்தூர் வட்டாச்சியர் அலுவலகத்தல் நடைபெற்ற சமாதான கூட்ட நடவடிக்கைகள் நகல் வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

sd/.P.Jaisankar
District Munsif cum Judicial Magistrate,
Athoor.